**FIRST INFORMATION REPORT**
**முதல் தகவல் அறிக்கை**
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8102100

1. District மாவட்டம் : DVAC
PS காவல்நிலையம்: DVAC Headquarters
Year ஆண்டு: 2019
FIR No. மு.த.அ. எண்: 2
Date நாள்: 04.02.2019

2. (i) Act சட்டம்: Prevention of Corruption — Sections பிரிவுகள்: 7
(ii) Act சட்டம்: (Amendment) Act 2018 — Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்: — Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள்
Date from நாள் முதல் : 29.01.2019 — Date to நாள் வரை : –
Time Period நேர அளவு :
Time from நேரம் முதல் : 1230 hrs — Time to நேரம் வரை : –
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 04.02.2019 — Time நேரம் : 09.00 hrs.
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 04.02.2019 — Time நேரம் : 11.00 hrs.

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக — Written

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் — 8 KM North
Beat Number : முறைக் காவல் எண்
(b) Address முகவரி : West K.K.Nagar Section AE office TANGEDCO, Anna Main Road, K.K.Nagar, Chennai.
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர்
District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையிட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் — B. Prasath
(b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் — P. Balakrishnan
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு — 1995
(d) Nationality : நாட்டினம் — Indian
(e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண் — \
Date of Issue : வழங்கப்பட்ட நாள்
Place of Issue : வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : தொழில் — Student
(g) Address : முகவரி — No.13, "H" Block, Navarathina Colony, Raja Mannar Salai, K.K.Nagar West, Chennai-78.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
① Tr. Boopalan, Asst. Engineer, TANGEDCO, K.K.Nagar West, Chennai-78.
② Tr. Padmanaban, O/o Asst. Engineer, West K.K.Nagar, TANGEDCO, K.K.Nagar, Chennai-78.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையிட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

No delay

* GCP 240-34(Type-2) 90,000 Cps -21.3.16(HCL-12)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary) —
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

10. Total value of properties stolen / involved : —
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any: —
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) : —
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

FIR contents in a separate sheet

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / ~~directed~~ S. Vallinayagam Rank Inspector to take up the Investigation / Refused Investigation / transferred to PS............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................ பதவி ..................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

B. Prasath 4-2-19

S. Vallinayagam 04.02.19

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்
(S. VALLI NAYAGAM)
Inspector of Police
Special Investigation cell,
Vigilance and Anti-corruption
Alandur, Chennai-16

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர்
Rank: நிலை No. எண்

<u>ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை தலைமையக குற்ற எண்.2/2019 பிரிவு-7 ஊழல் தடுப்பு (திருத்தம்) சட்டம், 2018 வழக்கின் முதல் தகவல் அறிக்கை வரிசை எண்.12ன் தொடர்ச்சி பின்வருமாறு.</u>

<u>பணிந்து சமர்பிக்கப்படுகிறது</u>

ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறை, சிறப்பு புலனாய்வு பிரிவு, ஆய்வாளர் சு.வள்ளிநாயகம் ஆகிய நான் 04.02.2019-ம் தேதி அன்று காலை சுமார் 9 மணியளவில் எனது அலுவலகத்தில் பணியில் இருந்தபோது சென்னை-78, கே.கே.நகர் மேற்கு, ராஜா மன்னார் சாலை, நவரத்தினா காலனி, 'H' பிளாக், எண்.13 என்ற முகவரியில் வசித்து வரும் திரு.பா.பிரசாத், த/பெ.பாலகிருஷ்ணன் என்பவர் எனது அலுவலகம் ஆஜராகி கணிணியில் தட்டச்சு செய்யப்பட்ட எழுத்து பூர்வமான புகார் மனு ஒன்றை என்னிடம் அளித்தார். அந்த புகார் மனு விவரம் பின்வருமாறு அனுப்புநர் பா.பிரசாத், த/பெ.பாலகிருஷ்ணன், எண்.13, "H" பிளாக், நவரத்தினா காலனி, ராஜா மன்னார் சாலை, கே.கே.நகர் மேற்கு, சென்னை-78. பெறுநர் உயர்திரு இன்ஸ்பெக்டர் அவர்கள், லஞ்ச ஒழிப்புத்துறை, ஆலந்தூர், சென்னை-16. அய்யா, நான் எண்.13, "H" பிளாக், நவரத்தினா காலனி, ராஜா மன்னார் சாலை, கே.கே.நகர் மேற்கு, சென்னை-78 என்ற விலாசத்தில் எனது பெற்றோருடன் குடியிருந்து வருகிறேன். நான் பி.காம் வரை படித்துள்ளேன். எனது தந்தை பாலகிருஷ்ணன் ஸ்ரீகிருஷ்ணா டிரேடர்ஸ் என்ற பெயரில் அரிசி மொத்த வியாபாரம் செய்து வருகிறார். நான் வசிக்கும் "எச்" பிளாக்கில் மொத்தம் 16 குடியிருப்பு வீடுகள் (Flats) உள்ளது. அவைகளுக்கு 18 மின் இணைப்பு மீட்டர்கள் உள்ளது. இந்த 18 மின் மீட்டர்களும் தரைதளத்தில் மேற்படி "எச்" பிளாக்கின் உட்பகுதியில் நுழைவாயில் அருகே வடக்கு பக்கமாக உள்ளது. இந்த மின் மீட்டர்கள் பொருத்தி சுமார் 35 ஆண்டுகளுக்கு மேல் ஆகிவிட்டது. அருகில் உள்ள மெயின் ரோடு உயரம் அதிகரிக்கப்பட்டதால் அடிக்கடி மழைநீர் உள்ளே வந்து மின் மீட்டரின் பலகையில் படுகிறது. சமீபத்திய சென்னை வெள்ளத்தில் வெள்ள நீர் உள்ளே வந்து மின் மீட்டர் பலகை பாதித்துவிட்டது. மின் இணைப்பு ஒயர்களும் மிகவும் பழுதடைந்து உள்ளது. எனவே குடியிருப்புவாசிகள் அனைவரும் மின் மீட்டர்களை தற்போதுள்ள இடத்திலிருந்து மாற்றி எங்களது "எச்" பிளாக்கிற்கு வெளியே அமைக்க விரும்பினர். "எச்" பிளாக்கில் குடியிருப்பவர்கள் என்னை அணுகி இந்த பணியை செய்யுமாறு கேட்டனர். அதன் அடிப்படையில் நான் 11.01.2019ந் தேதி காலை சுமார் 11 மணியளவில் கே.கே.நகர் அண்ணா மெயின் ரோட்டில் உள்ள மேற்கு கே.கே.நகர் பிரிவு மின்வாரிய உதவி பொறியாளர் திரு.பூபாலன் அவர்களை அவரது அலுவலகத்தில் சந்தித்து மின் மீட்டர்களை இடம் மாற்றி தர விண்ணப்பம் அளித்தேன். நான் 28.01.2019ந் தேதி மேற்படி மேற்கு கே.கே.நகர் மின்வாரிய அலுவலகம் சென்று விசாரித்ததில் மின் மீட்டர்களை இடமாற்றம் செய்ய கட்டணம் செலுத்துமாறு கூறினார்கள். அதன்படி நான் அன்றைய தினமே ஒரு மின் இணைப்புக்கு பதிவு கட்டணமாக மீட்டர் ஒன்றுக்கு ரூ.59/- வீதம், 18 மின் மீட்டர்களுக்கு மொத்தம் ரூ.1062/- செலுத்தி ரசீதுகள் பெற்று கொண்டேன். மின்

மீட்டர்கள் இட மாற்ற கட்டணம் செலுத்த பணம் இல்லாததால் அன்று திரும்பி வந்து விட்டேன். பின்னர் மறுநாள் 29.01.2019ந் தேதி காலை சுமார் 11.15 மணியளவில் மேற்படி மின்வாரிய அலுவலகம் சென்று 18 மின் மீட்டர்களுக்கும் இடம் மாற்று கட்டணமாக மொத்தம் ரூ.5868/- செலுத்தி ரசீதுகள் பெற்றேன். கட்டணம் செலுத்திய விவரத்தை தெரிவிப்பதற்கு மேற்படி மின்வாரிய உதவி பொறியாளர் திரு.பூபாலன் அவர்களை அன்று மதியம் சுமார் 12.30 மணியளவில் அவரது அறையில் சந்தித்து கட்டணம் செலுத்திய விவரத்தை தெரிவித்து ரசீதை காண்பித்தேன். 18 மின் மீட்டர்களை விரைவாக மேற்சொன்னவாறு இடமாற்றம் செய்து தருமாறு கேட்டேன். அப்போது மேற்படி திரு.பூபாலன் என்னிடம் ரூ.2000/- லஞ்சமாக கேட்டார். பணத்தை கொண்டு வந்து அவரது அருகில் அமர்ந்திருந்த அங்கு பணியாற்றும் திரு.பத்மநாபன் அவர்களிடம் கொடுக்குமாறு கூறினார். அப்போது திரு.பத்மநாபன் ஏ.இ. சார் கேட்ட பணத்தை சீக்கிரமாக கொண்டு வந்து கொடுத்தால் தான் வேலை நடக்கும் என்று கூறினார். நான் அப்போது அவரிடம் சார் அதிகமாக கேட்கிறிர்களே' என்று பத்மநாபன் சாரிடம் கேட்டேன். அதற்கு அவர் என்னிடம், போப்பா, ஏ.இ.க்கு ரூ.1000/- எனக்கு ரூ.1000/- இவ்வளவுதான் கேட்கிறோம் என்று சொன்னார். பணம் கொடுத்தால் தான் வேலை நடக்கும் என்று கூறினார்கள். எனக்கு லஞ்சம் கொடுக்க விருப்பமில்லை. எனது சொந்த வேலை காரணமாக உடனடியாக வர இயலவில்லை. என்னிடம் லஞ்சம் கேட்ட மேற்படி திரு.பூபாலன் மற்றும் திரு.பத்மநாபன் ஆகியோர் மீது நடவடிக்கை எடுக்கும்படி கேட்டு கொள்கிறேன். இப்படிக்கு (பா.பிரசாத்)

Sir, Received this complaint today (04.02.2019) at 9 am at my office and had discreet verification over the antecedents of the accused and bonafide of the complainant and after getting concurrence from the higher officers, registered a case in V&AC headquarters Cr.No.2/2019 u/s 7 of Prevention of Corruption (Amendment) Act, 2018 this day 04.02.2019 at 10.30 hrs and taken up for investigation. Sd/- (S.VALLINAYAGAM), INSPR OF POLICE/V&AC/SIC.

Vallinayagam 04.02.2019

(S.Vallinayagam),
Inspector of Police,
Special Investigation Cell,
Vigilance and Anti-Corruption,
Chennai-16
04.02.2019.